ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமல் லோககுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:



பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

முமுக்ஷுப்படி

தனியன்

லோகாசார்யகுரவேக்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே।
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நமঃ॥

லோககுரும் குருபிஸ்ஸஹபூர்வை: கூரகுலோத்தமதாஸமுதாரம்।
ஸ்ரீநகபத்யபிராமவரேசௌ தீப்ரசயம் வரயோகிநமீடே॥

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்।
யதீந்த்ர ப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம் முநிம்॥

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம்।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்॥

யோநித்யமச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹஸ் ததிதராணி த்ருணாயமேநே।
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமானுஜஸ்யசரணௌ சரணம்ப்ரபத்யே.

மாதாபிதாயுவதயஸ் தநயாவிபூதிঃ
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்।
ஆத்யஸ்ய நঃகுலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா॥

பூதம்ஸரஸ்ய மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்।
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத் பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்॥

மாமுனிகள் அருளிச்செய்த
ரஹஸ்யார்த்த ஸம்ப்ரதாய பரம்பரையின் ஒட்டுத் தனியன்கள்

லோகஶுரும் ஶுரு஭ிஸ்ஸஹபூர்வை: கூரகுலோத்தம ஊாஸமுஊாரம்।
ஶ்ரீநமபத்யஹிராமவரேசௌ ஓீப்ரஶயம் வரயோகிநமீஃபெ॥

பூர்வோக்த குருபரம்பரைக்கு ப்ரத்யேக தனியன்கள்
(ஈயுண்ணி பத்மநாபர் அருளிச்செய்தது)

லோகாசார்யாயஶுரவே க்ருஷ்ணபாஊஸ்ய ஸூநவே।
ஸம்ஸாரபஹ்ஶி ஸந்ஊஷ்ட ஜீவஜீவாதவேநம:॥

திருவாய்மொழிப்பிள்ளை அருளிச்செய்த
கூரகுலோத்தமதாஸர் தனியன்

லோகாசார்ய க்ருபாபாத்ரம் கௌண்ஊிந்ய குலஹூஷணம்।
ஸமஸ்தாத்மஶுணுவாஸம் வந்ஊகூரகுலோத்தமம்॥

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த
திருவாய்மொழிப்பிள்ளை தனியன்

நமஶ்ரீஶலைநாயாய குந்தீநஶரஜந்மநே।
ப்ரஸாஊலஶ்யபரம ப்ராப்ய கைங்கர்யஶாலிநே॥

மணவாளமாமுனிகளுக்கு மாதாமஹரான
கோட்டூர் அழகியமணவாளப்பெருமாள்பிள்ளை தனியன்

லோகாசார்யபஊாம்ஹஜ ராஜஹம்ஸாயிதாந்தரம்।
ஜ்ஞாநவைராஶ்யஜலயிம் வந்ஊெ ஸௌம்யவரம்ஶுரும்॥

மணவாளமாமுநிகள் அருளிச்செய்த
திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணரையர் தனியன்

ஶ்ரீஜிஹ்வாவஊயீஶஊாஸமமல மஶஷேஶாஸ்திரவிஊம்।
ஸுந்ஊரவரஶுருகருணுகந்ஊளித ஜ்ஞாநமந்ஊிரம் கலயே॥

இதன்பிறகு ஸ்வாசார்யபரம்பரைத் தனியன்களை அநுஸந்திக்க வேண்டும்.

அவதாரிகை

ஸ்ரீய:பதியாய், ஸ்ரீவைகுண்ட²நிகேதநனாய், நித்யமுக்தாநுபா⁴வ்யனாய், நிரதிஶயாநந்த³யுக்தனாயிருக்கிற ஸர்வேச்வரன், அந்த நித்யஸூரிகளோபாதி தன்னை அநுப⁴வித்து நித்யகைங்கர்யரஸராய் வாழுகைக்கு ப்ராப்தி யுண்டாயிருக்கச் செய்தேயும் அத்தை இழந்து *அஸந்நேவ*[1] என்கிறபடியே அஸத்கல்பராய்க்கிடக்கிற ஸம்ஸாரி சேதநருடைய இழவை அநுஸந்தி⁴த்து, அத்யந்த வ்யாகுலசித்தனாய், இவர்கள் கரணகளேபரங்களை இழந்து இறகொடிந்த பக்ஷிபோலே கிடக்கிற த³சையிலே கரணகளேப³ரங்களைக் கொடுத்து, அவற்றைக் கொண்டு வ்யபி⁴சரியாதே தன்னையாஶ்ரயித்து உஜ்ஜீவிக்கைக்கு உடலாக, அபௌருஷேயமாய், நித்யநிர்தோ³ஷமாய், ஸ்வத:ப்ரமாணமான வேத³த்தையும் தது³பப்³ரும்ஹணங்களான ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதி³களையும் ப்ரவர்த்திப்பித்த விடத்திலும், அந்த ஶாஸ்த்ராப்⁴யாஸத்துக்கு அநேகயோக்³யதை வேண்டுகையாலே, அவ்வழியாலே ஜ்ஞாநம் பிறந்து சேதநர் உஜ்ஜீவிக்கை அரிதாயிருக்கிறபடியைத் திருவுள்ளம் பற்றி, ஸகல சாஸ்த்ர தாத்பர்யங்களையும் ஸங்க்³ரஹமாக இவர்கள் அறியலாம்படி பண்ணவேணுமென்று ஸ்வரூபோபாய புருஷார்த²யாதா²த்ம்ய ப்ரதிபாத³கமான ரஹஸ்யத்ரயத்தையும் ஸ்வயமேவ ஆசார்யனாய் நின்று ப்ரகாஶிப்பித்தருளினான்.

அதில், திருமந்த்ரத்தை ஸ்ரீப³த³ரிகாஶ்ரமத்திலே ஸ்வாம்ஶபூ⁴தனான நரன் விஷயமாக ப்ரகாஶிப்பித்தான். த்³வயத்தை ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே ஸ்வமஹிஷியான பிராட்டி விஷயமாக ப்ரகாஶிப்பித்தான். சரமஶ்லோகத்தைத் திருத்தேர்தட்டிலே ஸ்வாஶ்ரிதனான அர்ஜுநன் விஷயமாக ப்ரகாஶிப்பித்தான். ஆகையாலிறே *லக்ஷ்மீநாத² ஸமாரம்பா⁴ம்*[2] என்று கு³ருபரம்பராதியிலே ஈஶ்வரனை அனுஸந்தி⁴க்கிறது.

இனி இந்த ரஹஸ்யத்ரயந்தான் ஶப்³த³ம் ஸங்க்³ரஹமாயிருந்ததேயாகிலும் அர்த²ம் உபதே³ஶக³ம்யமாகையாலும், அதறிந்தே எல்லார்க்கும் உஜ்ஜீவிக்க வேண்டுகையாலும், அந்த ரஹஸ்யத்ரயத்திலும் பூர்வாசார்யர்களுடைய உபதே³ஶ பரம்பரா ப்ராப்தமான அர்த² விசேஷங்களை ஸர்வர்க்கும் ஸங்க்³ரஹமாகவும் ஸுவ்யக்தமாகவும் பிள்ளைலோகாசார்யர் தம்முடைய பரமக்ருபையாலே இப்ரப³ந்த⁴ முவனே அருளிச்செய்கிறார். முன்பே ரஹஸ்யத்ரய விஷயமாக மூன்று ப்ரப³ந்த⁴மிட்டருளியிருக்கச் செய்தேயும், அதில் யாத்³ருச்சிகப்படி அதிஸங்க்³ரஹமாகையாலும், பரந்தபடி அதிவிஸ்த்ருதமாகையாலும், ஸ்ரீய:பதிப்படி உப⁴யதோ³ஷமுமின்றிக்கே இருந்ததேயாகிலும் ஸம்ஸ்க்ருதவாக்யப³ஹுளமாகையாலே பெண்ணுக்கும் பேதைக்கும் அதி⁴கரிக்கப் போகாமையாலும், த்ரிவித⁴தோ³ஷமுமில்லாதபடி இன்னமும் ஒரு ப்ரப³ந்த⁴மிடவேணுமென்று திருவுள்ளம்பற்றி, எல்லாவற்றுக்கும் பின்பிறே முமுக்ஷுப்படியாகிற இப்ரப³ந்த⁴மிட்டருளிற்று.

ஆகையிறே அல்லாத ப்ரப³ந்த⁴ங்கள் கிடக்க, இத்தை எல்லாரும் அதி⁴கரித்துப்போருகிறது. இன்னமும் பூர்வப்ரப³ந்த⁴ங்களில் அநுக்தமான அர்த²விசேஷங்களும் இப்ரப³ந்த⁴த்திலே உண்டாகையாலும், இதுவே எல்லார்க்கும் ஆத³ரணீயமாயிருக்கும்.

வ்யாக்²யாநாவதாரிகை முற்றிற்று.

முமுக்ஷுப்படி – திருமந்த்ர ப்ரகரணம்

உபோத்காதம்

1) முமுக்ஷுவுக்கு அறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று.

(வ்யா) (முமுக்ஷுவுக்கு அறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று) முமுக்ஷுவாகிறான் மோக்ஷத்திலே இச்சையையுடையனானவன். *முசல் மோக்ஷணே*³ யிறே தாது. இத்தால், ஸம்ஸார விமோசனத்தில் இச்சை பிறந்தவனுக்கு என்றபடி. ஆத்மப்ராப்தி காமனுக்கும் முமுக்ஷுத்வமுண்டேயாகிலும், இவ்விடத்தில் அவன் விவக்ஷிதனன்று, அவனுக்கு ரஹஸ்யத்ரயஜ்ஞாநாபேக்ஷை இல்லையிறே. ஆகையால், இவர் முமுக்ஷுவென்கிறது, பகவத்ப்ராப்தி காமதயா ஸம்ஸார நிவ்ருத்தியில் இச்சை பிறந்தவனை. ஏவம்பூதனானவனுக்கு 'அறிய வேண்டும் ரஹஸ்யம் மூன்று' என்றது – இவனுக்கு அவஶ்யம் ஜ்ஞாதவ்யமாயுள்ளது ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களா கையாலும், அவற்றை இந்த ரஹஸ்யத்ரயம் உள்ளபடி ப்ரதிபாதிக்கையாலும், ரஹஸ்யத்ரயமுமே அறியவேண்டுவதென்கை. *ஸ்வஜ்ஞாநம் ப்ராபகஜ்ஞாநம் ப்ராப்ய ஜ்ஞாநம் முமுக்ஷுபி:। ஜ்ஞாநத்ரயமுபாதேயம் ஏததந்யந்த கிஞ்சந॥* என்னக்கடவ திறே. 'ரஹஸ்யம் மூன்று' என்று இவர் உத்தேசிக்கிறது – திருமந்த்ரமும் த்வயமும் சரமஶ்லோகமுமாகிற இவற்றை என்னுமிடம், மேலே ஸுஸ்பஷ்டம். இவற்றை ரஹஸ்யங்களென்கிறது, ஸகல வேதாந்த ஸாரார்த்த ப்ரதிபாதகதயா பரமகுஹ்யங்க ளாகையாலே. ஆக, இவ்வாக்யத்தால், அதிகாரி நிர்த்தேஶமும் தத்ஜ்ஞாதவ்ய நிர்த் தேஶமும் பண்ணியருளினாராய்த்து.

(அவ) இனி, அந்த ரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதமரஹஸ்யம் ஏது என்னும் [1]ஆகாங்க்ஷை யிலே அருளிச் செய்கிறார், 'அதில் ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்' என்று.

2) அதில் ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்.

(வ்யா) அதாவது – அந்த ரஹஸ்யத்ரயத்திலும் வைத்துக்கொண்டு, இவ்வதிகாரிக்கு ப்ரதமம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யம் ஸ்வரூபயாதாத்ம்யபரமாய், த்யாஜ்யோபாதேய விபாக ஜ்ஞாநத்தைப் பரிபூர்ணமாகப் பிறப்பிக்குமதான திருமந்த்ரமென்கை. அநந்யார்ஹஶேஷத்வம், அநந்யஶரணத்வம், அநந்ய போக்யத்வமாகிற ஆகாரத்ரயத் தையும் ப்ரதிபாதிக்கையாலே சேதநஸ்வரூப யாதாத்ம்ய ப்ரதிபாதநபரமாய், ததநுகுண த்யாஜ்யோபாதேய விபாகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியா நின்றுள்ள இம் மந்த்ரத்தாலே ஸுஶிக்ஷிதமான ஸ்வரூபத்தை யுடையவனுக்கிறே மற்றை ரஹஸ்யங்களிரண்டாலும் ப்ரதிபாதிக்கப்படுகிற உபாயோபேயங்களில் அபேக்ஷை ஜநிப்பது. ஆகையாலே ஸ்வரூபயாதாத்ம்யபரமான திருமந்த்ரம் ப்ரதம

---

[1] आकाङ्क्षा - Purpose, intention, Inquiry, Expectancy *(கேள்விக்கு விடை)*

ரஹஸ்யமென்னக் குறையில்லை. இன்னமும், ப்ரணவத்துக்கு மந்த்ரஶேஷம் விவரணமானாற்போலே மந்த்ரசேஷத்துக்கு த்வயம் விவரணமாய், த்வயத்துக்குச் சரம ஶ்லோகம் விவரணமாயிறே இருப்பது. அந்த ந்யாயத்தாலும், இதினுடைய ப்ராதம்யம் ஸித்தமிறே. ஆக, இவை எல்லாவற்றையும் திருவுள்ளம் பற்றியாய்த்து 'ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்' என்று இவர் அருளிச்செய்தது. இத்தை மந்த்ரமென்கிறது *மந்தாரம் த்ராயத இதி மந்த்ர:* என்கிறபடியே ஶப்தஶக்தியாலும் அர்த்த ப்ரகாஶநத்தாலும் தன்னை அநுஸந்திப்பார்க்கு ரக்ஷகமாகையாலே. ஶப்தஶக்தியாலே ரக்ஷகமாம், ஜபஹோமாதிகளாலே கார்யங்கொள்ளும் உபாஸகர்க்கு. அர்த்த ப்ரகாஶநத்தாலே ரக்ஷகமாம் ஈச்வரனே உபாயோபேய மென்றிருக்கும் ப்ரபந்நர்க்கு. அர்த்தப்ரகாஶநத்தாலே ரக்ஷகமாகையாவது *உஹொஸகீதாதீஜ ஙூயீஙிரீயஜி ஹவதி பஊம் ஸாயு விஜீயாதீதிரூதீயம் ஸ்வாதநீதிரியாநீயஹெ யஜி ஸீயாதீவீரயஊஜிதாரஶஷெதீவயீஶீவஜெீஜீவிதீயம்। ஞூதீஜதீராணஹெநீஜூவஶீவநெீநஜ ஐதி வ வஊம் ஙாநீயவாஙாஸஜஹெஜஃ ஶஙீஊம் நாராயணாகீயம் விஷயவவஜயீஶீவஜெீ வதாரீயீம் வீரவுநீநஃ॥* [உஹொஸக்தாத்மஙூஜீஜிர் யஜி ஹவதி பஊம் ஸாயு விஜீயாத் த்ருதீயம், ஸ்வாதந்த்ர்யாந்யஹெ யஜி ஸ்யாத் ப்ரதமம் இதரஶஷெத்வதீஶீசேத் ஜீவிதீயம்। ஆத்மத்ராணேந்முவச்சேந்நம இதி ச பஊம் பாந்யவாஹாஸலோலஶீ ஶஙீஊம் நாராயணுவீயம் விஷயசபல யீஶீசேத் சதுர்த்யீம் ப்ரபந்நஃ॥] என்று ஹட்டரருளிச்செய்தபடியே தன்னை அநுஸந்திப்பார்க்கு உஹொத்மாஹி மாநமும், ஸ்வாதந்த்ர்யமும், அந்யஶஷெத்வமும், ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமும், அபந்யூஸங்கமும், விஷயப்ராவண்யமும் மேலிடாதபடிபண்ணி ஸ்வரூபாநுரூபமாக நடக்கும்படி நோக்குகை.

(அவ) இனிமேல் இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை விஸ்தரேண ப்ரதிபாதிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் இதினுடைய அநுஸந்தாந க்ரமகதநமுகத்தாலே இதின் வைபவத்தை அருளிச்செய்கிறார் 'திருமந்த்ரத்தினுடைய' என்று தொடங்கி.

3) திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி ப்ரேமத்தோடே பேணி அநுஸந்திக்க வேணும்.

(வ்யா) திருமந்த்ரத்துக்குச் சீர்மையாவது *ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவ ஆதர்வணாநிச – ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம்* என்கிறபடியே ஸகலவேத ஸங்க்ரஹமாய் 'மற்றெல்லாம் பேசிலும்' என்கிறபடியே ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகமாய் *மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யமுத்தமம், பவித்ரம் ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதந* என்கிறபடியே மந்த்ரங்களில் வைத்துக்கொண்டு பரமமான மந்த்ரமாய், குஹ்யங்களில் வைத்துக்கொண்டு உத்தமமான குஹ்யமாய், பவித்ரங்களுக்கும் பவித்ரமாயிருக்கிற கௌரவம். (சீர்மைக்குப் போரும்படி) என்றது, தகும்படியென்கை. (ப்ரேமத்தோடே பேணி அநுஸந்திக்கை) யாவது, இத்தை அநுஸந்திக்குமளவில் சுஷ்கஹ்ருதயனாயிருந் தநுஸந்திக்கை யன்றிக்கே இதின் வைலக்ஷண்ய ஜ்ஞாநமடியாக இதின் பக்கல் தனக்குண்டான ப்ரேமத்தோடே, குஹ்யாநாம் குஹ்யமானவிது அசலறியாதபடி